# எந்தன் இதய இனிய வேந்தன்

எந்தன் இதய இனிய வேந்தன்
என்னில் வந்து தங்கும் நேரம்
வந்ததும் வசந்தம் வீசுமே வசந்தம் வீசுமே (2)
வசந்தத்தில் வாழ்வுண்டு - வாழ்வில் அவனுண்டு
என்னில் அவனும் அவனில் நானும் என்றும் ஒன்று தானே

**1**
வாழ்க்கையின் மூச்சு நின்று விடும் அன்பே
வீசிடும் காற்று நீ எனில் இல்லை என்றால் - 2
ஓடோடி வந்தேன் உனை என்னில் ஏற்க
ஒன்றாகும் நேரம் நானுன்னைப் பாட ஆ - - -
அன்பு தெய்வமே அருள் தாருமே
நீ மீட்டும் வீணையும் நான் பாடும் பாடலும்
இரு கடலில் சங்கமிக்கும் இதய வேந்தனே

**2**
நிம்மதி நீயாய் இருக்கின்ற போது
நிதமும் நீ என்னில் தங்கிட வேண்டும் - 2
சிந்தனைகள் யாவும் நீ சீர்படுத்த வேண்டும்
சொல் செயல் யாவும்
தூய்மையாக வேண்டும் ஆ - - -
அன்பு தெய்வமே அருள் தாருமே
என் வறுமை எனும் இருள்
உன் வளமை ஒளியிலே
அகன்றிட வேண்டும் என் அன்பு தெய்வமே